**September - 2021 ( Current Affairs )**

**1. எந்த மாநிலத்தில், ரூ.11000 கோடிக்கு மேல் மதிப்புள்ள 45 நெடுஞ்சாலைத்திட்டங்களை மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சர் தொடங்கிவைத்துள்ளார்?**
விடை:மத்திய பிரதேசம்

**2. காலநிலை மாற்றமும் இமயமலைப்பிராந்தியத்தில் அதன் தாக்கமும்' என்ற தலைப்பில், இணையவழி பன்னாட்டு மாநாட்டை ஏற்பாடு செய்யவுள்ள நிறுவனம் எது?**
விடை:ஆரியபட்டா கூர்நோக்கு அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம், நைனிடால்

**3. 'தேன் இயக்கம்' திட்டத்தின்கீழ், தேனீ பெட்டிகளை விநியோகிக்கின்ற அமைப்பு எது?**
விடை:KVIC

**4. உடைக்கப்படவுள்ள, இந்திய கடற்படையின் மிக நீண்ட காலம் பணியாற்றிய போர்க்கப்பலின் பெயர் என்ன?**
விடை:INS விராட்

**5. NBFC-MFI'களுக்கு, கட்டமைக்கப்பட்ட நிதி & பகுதி உறுதியளிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள நிதி நிறுவனம் எது?**
விடை:NABARD

**6. 'COAS அலகு பாராட்டு' ஆனது எந்தப் பாதுகாப்புப் படையின் 51ஆவது சிறப்பு நடவடிக்கைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது?**
விடை:தேசிய பாதுகாப்புப் படை

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற கோல்ப் வீராங்கனை சோபியா போபோவ் சார்ந்த நாடு எது?**
விடை:ஜெர்மனி

**8. அண்மையில், ஆந்திர பிரதேசத்தில் பாய்ந்தோடும் எந்த ஆற்றில், 'பெளி' மீன் கண்டறியப்பட்டது?**
விடை:சிலேரு

**9. எந்த ஆற்றின் குறுக்கே, அண்மையில் திறந்துவைக்கப்பட்ட ஆற்றைக்கடக்க பயன்படும் இந்தியாவின் மிகநீளமான கயிற்றுப்பாதை கட்டப்பட்டுள்ளது?**
விடை:பிரம்மபுத்ரா



www.sakthyacademy.com

**10. வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் இணைந்து பணியாற்றுவதற்காக, AFC இந்தியா லிட் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள அமைப்பு எது?**
விடை:APEDA

**11.போலியோ நோயற்ற பிராந்தியம் என்று உலக நலவாழ்வு அமைப்பு அறிவித்துள்ள பிராந்தியம் எது?**
விடை:ஆப்பிரிக்கா

**12. NITI ஆயோக் வெளியிட்டுள்ள, 'ஏற்றுமதி தயார்நிலை அட்டவணை – 2020 ' இல் முதலிடம் வகிக்கும் இந்திய மாநிலம் எது?**
விடை:குஜோத்

**13.சமூக நீதி அமைச்சகத்தின் புதிய மனநல மறுவாழ்வு தொலைபேசி உதவி மையத்தின் பெயரென்ன?**
விடை:கிரண்

**14. ' காஷ்மீர் குங்குமப்பூ' வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக, எந்த நிறுவனத்துடன் இணைந்து, ஜம்மு -காஷ்மீர், மின்னணு ஏல வலைத்தளத்தை தொடங்கியுள்ளது?**
விடை:NSEIT லிட்

**15.வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கான முதல் சில்லறை காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ள பொதுக்காப்பீட்டு நிறுவனம் எது?**
விடை: பஜாஜ் அலையன்ஸ்

**16.சார் தாம் பரியோஜனா என்பது எந்த மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ள முக்கிய புனிதத்தலங்களை இணைக்கும் திட்டமாகும்?**
விடை:உத்தரகண்ட்

**17.இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தனது ஆண்டறிக்கையில் கணித்துள்ளபடி, 2020-21'இல், இந்தியாவின் வளர்ச்சி விகிதம் என்னவாக இருக்கும்?**
விடை: -4.5%

**18.உள்நாட்டு நீர்வழி வர்த்தகப்பாதையின் செயல்பாடுகளை, எந்நாட்டுடன் தொடங்க, இந்தியா, தயாராக உள்ளது?**
விடை:வங்கதேசம்

**19.ஆண்டுதோறும் பெண்கள் சமத்துவ நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

www.sakthyacademy.com

விடை:ஆகஸ்ட் 26

**20.எந்த அமைப்பால் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையின்படி, MGNREGA தொழிலாளர்கள் ஈட்டிய சராசரி வருவாய் இரட்டிப்பாகியுள்ளது?**
விடை:CRISIL

**21.தென்சீனக்கடல் தகராறில் ஈடுபட்டதற்காக, 24 சீன நிறுவனங்களை தடுப்புப்பட்டியலில் சேர்த்துள்ள நாடு எது?**
விடை:ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**22.அண்மையில், 'பிரதீக்ஷா' என்ற கடல்வழி அவசர ஊர்தியை வாங்கிய மாநிலம் எது?**
விடை:கேரளா

**23.பலவீனமான பிரிவைச் சேர்ந்த பெண்களின் பேரில் ரூ.22,000 கோடி மதிப்புள்ள வீட்டு மனைகளை பதிவு செய்து தருவதாக அறிவித்துள்ள மாநில அரசு எது?**
விடை:ஆந்திர பிரதேசம்

**24.வரைவு சுகாதார தரவு மேலாண்மை கொள்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**
விடை:தேசிய நலவாழ்வு ஆணையம்

**25.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற குல்குமாலே சென்ட்ரல் பார்க் அமைந்துள்ள நாடு எது?**
விடை:மாலத்தீவுகள்

**26.அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணையில் இணைப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ள மாநில அரசு எது?**
விடை:அருணாச்சல பிரதேசம்

**27.இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவு மீதான புதிய மன்றத்தின் தலைவர் யார்?**
விடை:சந்தீப் படேல்

**28.இந்திய மருத்துவக் கழகத்தின் அறிக்கையின்படி, மருத்துவப்படிப்பில் (MBBS), எந்தப் பாடத்தொகுதி புதிதாக சேர்க்கப்படவுள்ளது?**
விடை:பெருந்தொற்று மேலாண்மை

**29.மிகநீண்டகாலம் ஜப்பானின் பிரதமராக பதவி வகித்தவர் யார்?**
விடை:ஷின்சோ அபே

www.sakthyacademy.com

**30.பெய்ரூட்டின் பாரம்பரிய கட்டடங்களை புனரமைப்பதற்காக, 'பெய்ரூட்' என்ற புதியதொரு முயற்சியை தொடங்கியுள்ள உலகளாவிய அமைப்பு எது?**
விடை:UNESCO

**31. காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணியகத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**
விடை:புது தில்லி

**32. ரூ.850 கோடி செலவில் இந்தியாவின் முதல் திறன் பல்கலைக்கழகத்தை அமைக்கவுள்ள மாநிலம் எது?**
விடை:அஸ்ஸாம்

**33. நடப்பு நிதியாண்டில், 20 இலட்சம் சந்தாக்களை நெருங்கியுள்ள அரசுத்திட்டம் எது?**
விடை:அடல் ஓய்வூதிய திட்டம்

**34.பெண்களால் நடத்தப்படும் நாட்டின் முதல் பன்னாட்டு வர்த்தக மையத்தை அமைக்கவுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**
விடை:கேரளா

**35.அண்மையில் வட கொரியாவில் நிலச்சரிவை ஏற்படுத்திய சூறாவளியின் பெயரென்ன?**
விடை:பவி

**36. 'தேசிய அளவில் பெறப்பட்ட பங்களிப்புகள் - ஆசியாவுக்கான போக்குவரத்துத் திட்டத்தின்' இந்திய கூறுகளைத் தொடங்கவுள்ள அமைப்பு எது?**
விடை:NITI ஆயோக்

**37. இந்திய மருத்துவர் துவாரகநாத் கோட்னிசுக்கு மதிப்புறு சிலை அமைக்கவுள்ள நாடு எது?**
விடை:சீனா

**38. நடுவணரசு அறிமுகப்படுத்திய வேளாண் சந்தைப்படுத்தல் தொடர்பான அவசர ஆணைகளுக்கு எதிராக தீர்மானத்தை நிறைவேற்றிய மாநில சட்டமன்றம் எது?**
விடை:பஞ்சாப்

**39. மகளிர் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால், 'போஷான்மா' ஏற்பாடு செய்யப்படுகிற மாதம் எது?**



www.sakthyacademy.com

விடை:செப்டம்பர்

**40. எளிதாக தொழில் புரிவது (ease of doing business) குறித்த அறிக்கையை வெளியிடுகிற அமைப்பு எது?**
விடை:உலக வங்கி

**41.கங்கையில் காணப்பட்ட, '*Systomus gracilus*' என்பது கீழ்க்கண்டவற்றுள் எவ்வினம் சார்ந்தது?**
விடை:மீன்

**42. 'SpiceOxy' என்ற பெயரில் புதிய செயற்கை சுவாச வழங்கியை அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?**
விடை:ஸ்பைஸ்ஜெட்

**43.எந்நாட்டின் ஒற்றுமை இயக்கத்தைக் குறிக்கும் வகையில், குதுப் மினார், வெண்மை மற்றும் செம்மை வண்ணங்களில் ஒளிரப்பட்டது?**
விடை:போலந்து

**44.நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக, இந்திய உச்சநீதிமன்றம், பிரசாந்த் பூஷனுக்கு விதித்த அபராதம் எவ்வளவு?**
விடை:ரூ.1

**45.மும்பை பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் (MIAL) 74% பங்குகளை வாங்கியுள்ள நிறுவனம் எது?**
விடை:அதானி குழுமம்

**46. இந்தியா & எந்தப் பன்முகச் சங்கத்துடனான பொருளாதார அமைச்சர்கள் ஆலோசனைக்கூட்டமானது, அண்மையில், மெய்நிகராக நடைபெற்றது?**
விடை:ASEAN

**47.ஓணம் என்பது எந்த இந்திய மாநிலத்தின் பண்பாட்டுத் திருவிழாவாகும்?**
விடை:கேரளம்

**48.எந்த நாட்டின் பிரதமராக, முஸ்தபா ஆதிப், பரிந்துரைக்கப்பட்டுள்ளார்?**
விடை:லெபனான்
**49. 'ஸ்வச்சதா'பிரச்சனைகளில் கவனஞ்செலுத்துவதற்காக, அனைத்து அமைச்சகங்களாலும் பதினைந்து நாட்கள் கடைப்பிடிக்கப்படும் ஒரு நிகழ்வின் பெயரென்ன?**



www.sakthyacademy.com

விடை:ஸ்வச்சதா பக்வாடா

**50.விறியோகச் சங்கிலி நெகிழ்திறன் தொடர்பான ஆஸ்திரேலியா-இந்தியா-ஜப்பான் அமைச்சர்களின் கூட்டத்தில், இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியது யார்?**
விடை:பியூஷ் கோயல்

**51.இந்திய அரசு ஒப்புதல் அளித்த, புதிய குடிமைப் பணிகள் சீர்திருத்த இயக்கத்தின் பெயர் என்ன?**
விடை:கர்மயோகி இயக்கம்

**52. ‘ ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை’ திட்டத்தில், தற்போது, இந்தியாவின் எவ்விரு யூனியன் பிரதேசங்கள் இணைந்துள்ளன?**
விடை: லடாக் & இலட்சத்தீவுகள்

**53. விளையாட்டு வீரர் / வீராங்கனைகளை அரசாங்க வேலைகளில் நேரடியாக சேர்ப்பதற்கு, எத்தனை விளையாட்டுகள் சேர்க்கப்பட்டுள்ளன?**
விடை: 20

**54. பிரதமர் கிசான் சம்பதா திட்டத்தை அமல்படுத்தும் நிறுவனமாக உள்ள மத்திய அமைச்சகம் எது?**
விடை: உணவுப் பதனிடுதல் தொழிலகங்கள் அமைச்சகம்

**55.எந்த ஆயுதப்படைக்கு, பினாகா படையணியை வழங்குவதற்காக, பாதுகாப்பு அமைச்சகம் BMEL, TATA பவர் மற்றும் L&T ஆகியவற்றுடன் கூட்டிணைந்துள்ளது?**
விடை: இந்திய இராணுவம்

**56. PUBG உள்ளிட்ட 118 செயலிகளுக்கு தடை விதித்துள்ள மத்திய அமைச்சகம் எது?**
விடை: மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

**57.நாட்டில் மெட்ரோ இரயில்களை இயக்குவதற்கான வழிகாட்டல்களை வெளியிட்ட அமைச்சகம் எது?**
விடை: வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

**58.ஐக்கிய அரபு அமீரகத்தை (UAE) அடைவதற்கு, அனைத்து நாடுகளின் வானூர்திகளும் தன் நாட்டின் வழியாக செல்லலாம் என அனுமதித்துள்ள நாடு எது?**
விடை: சவூதி அரேபியா

www.sakthyacademy.com

**59.எந்த மாநிலத்தை மட்டும் தவிர்த்து, நாடு முழுவதும் மெட்ரோ இரயில் சேவைகள் இயக்கப்படவுள்ளன?**
விடை: மகாராஷ்டிரா

**60.எந்த நாட்டின் புதிய பிரதமராக ஹிச்செம் மெச்சிச்சி நியமிக்கப்பட்டுள்ளார்?**
விடை: துனிசியா

**61.இந்தியாவுடன் இணைந்து, 'இந்தோ-பசிபிக் உத்தி'யை வெளியிட்டுள்ள நாடு எது?**
விடை:ஜெர்மனி

**62.நைனிடாலில் உள்ள ARIES'இன் அறிவியலாளர்கள், பிற நகர்ப்புற பகுதிகளுடன் ஒப்பிடும்போது எந்த நகரத்தின் மீது ஓசோன் படலத்தின் செறிவு மிகவும் குறைந்திருப்பதைக் கண்டுபிடித்தனர்?**
விடை:கௌகாத்தி

**63.இந்தியாவில் மட்டுமே தயாரிக்கப்படும் எந்த வகை கப்பலை வாங்கவோ / வாடகைக்கு எடுக்கவோ அனைத்து முதன்மை துறைமுகங்களுக்கும், மத்திய கப்பல் அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது?**
விடை:இழுவைப்படகு

**64. ' தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை மேம்படுத்துதல்' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**
விடை:UNEP

**65.எதிர்கால வணிகக்குழுவை அறிமுகப்படுத்தியுள்ள இந்திய வர்த்தக சங்கம் எது?**
விடை:CII

**66.தில்லி IIT'இன் அடைவிலுள்ள, 'சக்ர்' என்ற துளிர் நிறுவனம் உருவாக்கியுள்ள, N95 தூய்மையாக்கும் கருவியின் பெயர் என்ன?**
விடை:Chakr DeCoV

**67. 2020-25 ஆம் ஆண்டிற்கான தனது புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கைக்கு ஒப்புதல் அளித்துள்ள மாநிலம் எது?**
விடை:கர்நாடகா

**68.இரண்டாம் உலகப்போரின் பாரம்பரிய நகரமாக அறிவிக்கப்பட்ட வில்மிங்டன் அமைந்துள்ள நாடு எது?**
விடை:ஐக்கிய அமெரிக்க நாடுகள்



www.sakthyacademy.com

**69.அண்மையில் வடகொரியாவைத் தாக்கிய சூறாவளியின் பெயரென்ன?**
விடை:மேசக்

**70. இம்மாதம் நடைபெற்ற BIMSTEC கூட்டம், எந்த நாட்டின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டது?**
விடை:இலங்கை

**71.திரிபுரா மாநிலத்தின் முதல் சிறப்பு பொருளாதார மண்டலம் (SEZ) எங்கு அமைக்கப்படுகிறது?**
விடை:சப்ரூம்

**72.சாலி புயலால் பாதிக்கப்பட்டு, அதன் மாகாணங்களில் அவசரநிலையை அறிவித்த நாடு எது?**
விடை:ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**73. 1962 ’க்குப் பிறகு முதன்முறையாக ஆசியாவின் பொருளாதாரம் சரியும் என மதிப்பிட்டுள்ள நிறுவனம் எது?**
விடை:ஆசிய வளர்ச்சி வங்கி

**74. ‘நமாமி கங்கை’ திட்டம் மற்றும் ‘அம்ருத்’ திட்டத்தின்கீழ், எந்த மாநிலத்தில், பல்வேறு திட்டங்களை பிரதம அமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்?**
விடை:பீகார்

**75.அரசாங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட புதிய வங்கி ஒழுங்குமுறை (திருத்த) மசோதா, எந்த வகை நிறுவனங்களை மறுசீரமைக்க, இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரமளிக்கிறது?**
விடை:கூட்டுறவு வங்கிகள்

**76.யாரின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், செப்டம்பர்.15 அன்று, இந்தியா, பொறியாளர் நாளைக் கொண்டாடுகிறது?**
விடை:M விஸ்வேஷ்வரையா

**77.மஞ்சள்கடலில் ஒரு கப்பலிலிருந்து, 9 செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக புவிசுற்றுப்பாதைக்கு ஏவிய நாடு எது?**
விடை:சீனா

**78. CAPEX திட்டத்தின்கீழ் , “கொல்லைப்புற தோட்டம்” என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் / யூனியன் பிரதேச அரசு எது?**
விடை:ஜம்மு & காஷ்மீர்



www.sakthyacademy.com

**79.அண்மையில், பெண்களின் நிலை குறித்த ஆணையத்தின் உறுப்பினராக தெரிவான நாடு எது?**
விடை:இந்தியா

**80.இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையத்துடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**
விடை:ஆயுஷ் அமைச்சகம்

**81. அண்மையில், அயல்நாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்றுதல்) திருத்த மசோதா, 2020'ஐ மக்களவை நிறைவேற்றியது. அசல் அயல்நாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்றுதல்) சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?**
விடை:2010

**82. நடப்பாண்டு (2020), ஐக்கிய நாடுகள் அவையின் எத்தனையாவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது?**
விடை:75ஆவது ஆண்டு நிறைவு

**83.அண்மையில் இந்திய நாடாளுமன்றம், COVID-19 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் நலவாழ்வு ஊழியர்கள் மீதான வன்முறைச் சம்பவங்களை பிணை பெறவியலாத குற்றமாக மாற்றுவதற்கு 2020ஆம் ஆண்டு தொற்றுநோய்கள் (திருத்த) மசோதாவை நிறைவேற்றியது. அசல் தொற்றுநோய்கள் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?**
விடை:1897

**84.அண்மையில், பிரதமர் தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, 2021-22 சந்தைப்படுத்துதல் பருவத்துக்கான ரபி பயிர்களுக்கு, குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) அதிகரிக்க ஒப்புதல் அளித்தது. பின்வருவனற்றில் எது ரபி பயிர் அல்ல?**
விடை:நிலக்கடலை

**85. அண்மையில், 'நீடித்த மீட்பு' அறிக்கை என்ற சிறப்பு அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**
விடை:பன்னாட்டு ஆற்றல் முகமை

**86.VAJRA ஆசிரியர் திட்டத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**
விடைஅறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

**87. இந்திய அரசானது நாட்டின் முதல் மருத்துவ சாதன பூங்காவை அமைக்கவுள்ள மாநிலம் எது?**
விடை:கேரளா

**88. உலக இருதய நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

www.sakthyacademy.com

விடை:செப்டம்பர் 29

**89. இரும்புத்தாது சுரங்கத்திற்கு பெயர்பெற்ற தோனிமலை அமைந்துள்ள மாநிலம் எது?**
விடை:கர்நாடகா

**90. ஆயுஷ்மான் பாரத் – பிரதமர் ஜன் ஆரோக்கியா யோஜனாவை (AB-PMJAY) அமல்படுத்துவதற்காக இந்திய அரசு நியமித்துள்ள அமைப்பு எது?**
விடை:தேசிய நலவாழ்வு ஆணையம்

**91. அண்மையில், நிறுவனங்கள் (திருத்த) மசோதா, 2020'ஐ இந்திய மக்களவை நிறைவேற்றியது. அசல் நிறுவனங்கள் (ஒழுங்காற்றுதல்) சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?**
விடை:2013

**92.வங்கிகளின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்த முற்படும் மற்றும் வங்கிகளின் உரிமம், நிர்வாகம் மற்றும் செயல்பாடுகள் போன்ற பல்வேறு அம்சங்களைப் பற்றிய விவரங்களை வழங்கும் வங்கி ஒழுங்காற்றுதல் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?**
விடை:1949

**93.வேளாண் எந்திரமயமாக்கலில் புத்தாக்கங்களை ஊக்கப்படுத்துவதற்காக, தேசிய வேளாண்மை உயர் கல்வித்திட்டத்தின்கீழ் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம் தொடங்கிய ஹேக்கத்தானின் பெயரென்ன?**
விடை:கிரிதக்யா

**94. “அறிவுசார் சொத்துரிமை குறித்த விழிப்புணர்வைக் கட்டமைத்தல்” என்ற திட்டத்தை செயல்படுத்துகிற அமைச்சகம் எது?**
விடை:குறு, சிறு & நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

**95. தொழிலாளர் தொடர்பான இரண்டாவது தேசிய ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு எது?**
விடை:2002

**96. அதிக எண்ணிக்கையிலான செவிலியர் கல்லூரிகளைக் கொண்ட இந்திய மாநிலம் எது?**
விடை:கர்நாடகா

**97. கீழ்க்காணும் எந்த இரு இந்திய மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களை ஷிங்குன் லா சுரங்கப்பாதை இணைக்கிறது?**
விடை:லடாக் & ஹிமாச்சல பிரதேசம்

www.sakthyacademy.com

**98. அண்மையில், பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, இராஷ்டிரிய உச்சதார் சிக்ஷா அபியானுக்கான இடைக்கால நீட்டிப்புக்கு ஒப்புதல் அளித்தது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு எது?**

விடை:2013

**99. அண்மையில், நிலம் கிடைப்பு குறித்த நிகழ்நேர தகவலை வழங்குவதற்காக, 6 மாநிலங்களின் புவிக் கோளத் தகவல் அமைப்புடன் (GIS) எந்த வலைத்தளத்தை இந்திய அரசு ஒருங்கிணைத்துள்ளது?**

விடை:தொழிற்துறை தகவல் அமைப்பு

**100. அண்மையில், ஜம்மு-காஷ்மீர் அலுவல்பூர்வ மொழிகள் மசோதா, 2020'ஐ இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றியது. ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள அலுவல்பூர்வ மொழிகளின் பட்டியலில், பின்வரும் மொழிகளுள் எ(து)வை சேர்க்கப்பட்டுள்ள(து)ன?**

விடை:கஷ்மீரி, ஹிந்தி ,டோக்ரி

www.sakthyacademy.com